நெல் மற்றும் தானியம், இயற்கை உணவுகள், மரக்கறிகள்,
பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு
பயிர்ச்செய்கை மேம்பாடு, விதைகள் உற்பத்தி மற்றும் உயர்
தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு

# நெல் சந்தைப்படுத்தல் சபை

## பதவி வெற்றிடங்கள்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் நிலவும் முறைமை நிர்வாகி, உதவி பிரதேச முகாமையாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முறைமை நிர்வாகி – (JM 1-1) (IIஆந் தரம்)

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 அல்லது 5ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

1. பதவிக்குரித்தான பாடத்துறையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / முறைமை நிர்வாகம் தொடர்பான பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்டச் சபை / வர்த்தக நிறுவனமொன்றில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரித்தான பாடத்துறைக்குப் (கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / முறைமை நிர்வாகம்) பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் மத்திய இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின் இயைபுடைய விடயத்துறையில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறனின் (NVQ) ஏழாவது (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றை கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / முறைமை நிர்வாகம் தொடர்பில் பெற்றுக்கொண்டதன் பின் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறனின் (NVQ) ஆறாவது (06) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றை கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / முறைமை நிர்வாகம் தொடர்பில் பெற்றிருத்தல் வேண்டும்.

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்டச் சபை / வர்த்தக நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறனின் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றை கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / முறைமை நிர்வாகம் தொடர்பில் பெற்றிருத்தல் வேண்டும்.

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்டச் சபை / வர்த்தக நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் பத்து (10) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்:** (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA-1) சேவை வகுதியில் 11வது தரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (MA-2) சேவை வகுதியில் 11வது தரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** JM 1-1 2016, ரூபா 42,600 – 10x755 – 18x1135 – ரூபா 70,580

**வயதெல்லை:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## உதவிப் பிரதேச முகாமையாளர் – (MA-3) (IIIஆந் தரம்)

**(அ) கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகத் திலிருந்து பெற்றுக்கொண்ட பட்டம்.

**(ஆ) ஏனைய தகைமைகள்**

ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த ஆற்றல் மற்றும் கணனி தேர்ச்சி, நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல், விற்பனை மேம்பாடு மற்றும் விளம்பரம் போன்ற துறைகள் தொடர்பில் உள்ள அறிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**(இ) சம்பள அளவு**

MA3 - 2016, ரூபா 32,200 – 10x445 – 11x660 – 10x730 – 5x750 ரூபா 54,960

**(ஈ) வயதெல்லை**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## முகாமைத்துவ உதவியாளர் – (MA 1-1) (IIIஆந் தரம்)

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

(1) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) கணனித் தேர்ச்சி மற்றும் இயைபுடைய துறையின் அனுபவம் விசேட தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

பின்வரும் விதிகளின் கீழ் நிறுவனத்தின் ஆரம்ப சேவை வகுதியில் தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சியுடைய வகுதிக்குரித்தான ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(அ) மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு இயைபான (1) தகைமைகள் ஏற்புடையதாகும்.

(ஆ) சேவையில் நிரந்தர நியமனம் வகித்தல் வேண்டும் என்பதுடன் நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருட காலம் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(இ) சம்பள அளவு**

MA 1-1 - 2016, ரூபா 27910 – 10x300 – 07x350 – 04x495 – 20x660 – ரூபா 48,540

**(ஈ) வயதெல்லை**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் உள்வாரியாக விண்ணப்பங்களைக் கோரி ஆட்சேர்க்கப்படும் போது உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்து சகிதம்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- நியமனம் பெறுபவர் இயைபுடைய சம்பளத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் அமர்த்தப்படுவதுடன், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- சுய தரவு தகவல்களை உள்ளடக்கி தம்மால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் உறவினரல்லாத இருவரின் தகவல்களை உள்ளடக்கி 2021-02-02ஆம் திகதிக்கு முன் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்), நெல் சந்தைப்படுத்தல் சபை, 6ஆம் மாடி, வீடமைப்புச் செயலகக் கட்டிடம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நியமனம் தொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகித்தல் / பொய்யான தகவல்களை வழங்குதல் தகைமையீனத்துக்கு காரணமாகும்.
- ஆட்சேர்க்கப்படும் உதவிப் பிரதேச முகாமையாளர்கள் வெற்றிடங்கள் நிலவும் வடக்கு / கிழக்கு / ஊவா / வடமத்திய மாகாண சேவை நிலையங்களுடன் இணைந்து சேவையாற்ற நேரிடலாம்.
- நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை.**